2007 ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

சாலை சீரமைப்பு

***2537—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி ஏரிக்கரை உடைப்பினால் ஓசூர்–தளி நெடுஞ்சாலை துண்டிக்கப்பட்டு போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளதைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஓசூர்–தளி நெடுஞ்சாலையில் கி.மீ. 25/8–ல் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏரிக் கரையில் உள்ள பாலம் ஏற்கெனவே பெய்த மழையின் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதற்குப் பதிலாக, புதிய பாலம் கட்டும் பணி துறையின் பரிசீலனையில் உள்ளது. வரக்கூடிய 2008, ஜூன் இறுதிக்குள் அந்தப் பாலம் கட்டி முடிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி சட்டமன்றத் தொகுதியில் கடந்த 4 ஆண்டுகளாகச் சீரமைக்கப்படாமல் இருந்த தேன்கனிக்கோட்டை–தளி சாலை, தேன்கனிக்கோட்டை–கெலமங்கலம் சாலை, அத்திப்பள்ளி–இராயக்கோட்டை சாலை ஆகிய மூன்று சாலைகளைச் சீரமைத்து 5½ மீட்டர் அகலப்படுத்த, ரூ.10 கோடியே 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்த தமிழக அரசுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, தளி சட்டமன்றத் தொகுதியில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெய்த கன மழையினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, தளி பெரிய ஏரிக்கரை உடைந்து, தளி–ஓசூர் பிரதான நெடுஞ்சாலை துண்டிக்கப்பட்டு இருப்பதால், அந்தப் பகுதியில் இருந்து தொழில் நகரமான ஓசூருக்குச் செல்லும் தொழிலாளர்களுக்கும், பள்ளி

கல்லூரி செல்லும் மாணவர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதால் துண்டிக்கப்பட்ட நெடுஞ்சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர்–தளி சாலையில் கி.மீ 25/8–ல் பொதுப் பணித் துறை ஏரிக்கரையில் உள்ள பாலம், திரும்பக் கட்டும் பணிக்காக நிர்வாகப் பொறியாளர் அனுமதி பெற்று 30 மீட்டர் நீர் வெளியேறும் பாதையைக் கணக்கில்கொண்டு, NABARD R.I.D.F. XI திட்டத்தின்கீழ், அரசாணை எண் 78, நெடுஞ்சாலைத் துறை, நாள் 26–5–2006–ன்படி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு 1–3–2006 முதல் 3 முறை ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டதில், எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை. 28–9–2006–ல் 4–வது அழைப்பில் மட்டும் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதனிடையில் தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை ஏரியினை ஆய்வு செய்து, மேற்படி இடத்தின் நீர் வழிப் பாதையை 45 ½ மீட்டர் அகலம் மற்றும் நேர்பாட்டினையும் மாற்றியமைக்க அறிவுரை வழங்கி, அதன் விவரத்தைத் தலைமைப் பொறியாளர் (பொது) (நெடுஞ்சாலை), சென்னை அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: *தலைமைப் பொறியாளர் (பொது) (நெடுஞ்சாலை) அவர்களின் குறிப்பாணை, நாள் 18–12–2006–ன்படி, திருத்திய மதிப்பீடு இத்துறையினால் தயாரிக்கப்பட்டு வருகிறது. விரைவில் திருத்திய நிர்வாக அனுமதி வழக்கப்பட்டு, மேற்படி பாலம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கை விரைந்து மேற்கொள்ளப்பட்டு 2008, ஜூன் இறுதிக்குள் மேற்படி பாலம் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி.*

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய நன்றி அறிவிப்பு. என்னுடைய திருப்போரூர்

தொகுதியிலிருந்து சென்னை திநகர் வரையிலும் அதேபோன்று மறைமலை நகரிலிருந்து சென்னை தி. நகருக்கும் புதியதாகப் பேருந்து வழித் தடங்களை உருவாக்கி, அதில் புதிய பேருந்துகளை விட்ட டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதேபோன்று மாவட்டச் செயலாளர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், திருப்போரூர் தொகுதி மக்களின் நன்றியையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் என்னுடைய கேள்வி..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவ்வளவு நேரம் கேள்வி கேட்காமல், எதைக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள்?

திரு. டி. மூர்த்தி: நன்றி, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, கேள்வி கேளுங்கள்.

திரு. டி. மூர்த்தி: திருப்போரூர் தொகுதி பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான நெமிலி—திருப்போரூர் இடையே பக்கிங்காம் கால்வாய்மீது மேம்பாலம், நெடுஞ்சாலைத் துறை மூலமாக அமைத்துத் தரப்படுமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்: மூலக்கேள்வி ஓசூர்—தளி சாலையிலுள்ள பாலம் கட்டும் பணிக்கானது. இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தனிக் கேள்வி எழுப்பினால் உரிய பதில் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரா. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

19—

அடிப்படை வசதிகள்

***537—திருமதி மு. சந்திரா:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதியில் ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து தருவதற்குச் சிறப்பு நிதி ஒதுக்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?